# 25 இலங்கையிலுள்ள சைவசமய நிறுவனங்கள்

## சைவவித்தியாவிருத்திச் சங்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கைச் சைவர்கள் மத்தியில் கல்வியின் முக்கியத்துவம் உணரப்படலாயிற்று. அன்று பெரும்பாலான பாடசாலைகள் கிறிஸ்தவ மிஷனறிகளாலேயே நடாத்தப்பட்டன. இப் பாடசாலைகளில் கற்பதற்காக சைவர்கள் பலர் மதம்மாறினர். சைவப்பாரம்பரியங்களை படிப்படியாகக் கைவிடத் தொடங்கினர். இத்தகைய சூழ்நிலையில் சைவத்தமிழ் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் முகமாக இலங்கை சைவ சமய நிறுவனங்கள் பல தோற்றம் பெற்றன. அவ்வாறு தோற்றம் பெற்ற சைவ சமய நிறுவனங்களில் ஒன்றாக சைவவித்தியாவிருத்திச் சங்கம் அமைகின்றது.




### 01.தோற்றம்

சைவவித்தியாவிருத்திச் சங்கம் 1923ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. இதன் தலைவராக சேர் பொன் இராமநாதனும் செயலாளராக சி.இராசரத்தினம் அவர்களும் விளங்கினர். சேர்.வைத்திலிங்கம் துரைச்சாமி, சு.இராசரத்தினம், சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் முதலானோர்களும் இதன் உறுப்பினர்களாக விளங்கினர்.

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் உறுப்பினராக இருந்த சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் இதன் முகாமையாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். 1923ஆம் ஆண்டு முதல் 1970ஆம் ஆண்டுவரை இச்சங்கத்தின் உயிர் நாடியாக விளங்கி சங்கத்தின் செயற்பாடுகளுக்கு உத்வேகமளித்தார். அதனால் இவரை இந்துபோர்ட் இராசரத்தினம் என சங்கத்தின் பெயரால் அழைத்தனர்.



இந்துபோர்ட் இராசரத்தினம்

## 02.நோக்கம்

*சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் நோக்கங்களாகப் பின் வருவன அமைந்தன.*

*01. இலங்கையில் எங்கெங்கே தேவையோ அங்கெல்லாம் சைவப் பாடசாலைகளை அமைத்துப் பரிபாலித்தல்.*

*02. தனியாரால் ஆரம்பித்து நடத்துவதற்கு வசதிவாய்ப்பு அருகி கையளிக்கும் பாடசாலைகளை ஏற்று நடத்துதல்.*

*03. முன்னரே ஆரம்பித்து நடைமுறையில் உள்ள சைவப்பாடசாலைகளுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்துகொடுத்தல்.*

*04. சைவாசிரியர்களைப் பயிற்றுவித்தல்.*

*05. சைவப் பண்பாட்டினைப் பேணிப்பாதுகாத்தல்.*

*06 முத்தமிழை வளர்த்தல்.*

*07. அநாதை சைவப்பிள்ளைகளைப் பராமரித்தல்.*

## 03. பணிகள்.

### அ.சைவப்பாடசாலைகளை அமைத்தல்

*இச்சங்கத்தின் பிரதான நோக்கங்களுக்கமைய இலங்கையின் பல பாகங்களிலும் சைவப் பாடசாலைகள்அமைக்கப்பட்டன. இது நிறுவிய முதலாவது பாடசாலையாக மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம் அமைகின்றது. யாழ்ப்பாணம்-156, கிளிநொச்சி-10, வவுனியா-05, முல்லைத்தீவு-07, மன்னார் -01, பதுளை 01, நாவலப்பிட்டி-03, கண்டி-02, புத்தளம்-02 என்றவாறு மொத்தம் 187 பாடசாலைகள்இதன்முகாமைத்துவத்தின் கீழ் காணப்பட்டன. அவற்றுள் 03 ஆங்கில மொழிப் பாடசாலைகளும், 04 இரு மொழிப் பாடசாலைகளும் காணப்பட்டன. அவை சைவத்தமிழ்ப் பெயர்களால் அழைக்கப்பட்டன. நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி, அராலி இந்துக்கல்லூரி, வதிரி தேவராளி இந்துக்கல்லூரி,வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரி, நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி, முதலிய இன்றைய முன்னணிப் பாடசாலைகள் இதன் முகாமைத்துவத்தினால் வளர்ச்சி கண்டவையாகும். 1961ஆம் ஆண்டு அரசாங்கம் இப்பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் பாடசாலைகளை அமைக்கும் பணி கைவிடப்பட்டது.*




மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம்



திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை

## ஆ.சைவாசிரிய கலாசாலையை நிறுவியமை

சைவ ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கில் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை 1925ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக மயிலிட்டி சுவாமிநாதன் விளங்கினார். இதன் சிறந்த விரிவுரையாளர்களில் ஒருவராக பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் விளங்கினார். இது 1963 ஆம் ஆண்டு அரசினரால் மூடப்படும்வரை இங்கு 1500ற்கு மேற்பட்ட சைவாசிரியர்கள் பயிற்சி பெற்று வெளியேறினர்.

## இ.காவியப்பாடசாலை அமைத்தமை

சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களது தராதரத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கில் காவியப்பாடசாலை ஒன்று 1930ஆம் ஆண்டு சைவாசிரிய கலாசாலையில் உருவாக்கப்பட்டது. அதில் பாலபண்டிதர், பண்டிதர் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

## ஈ.தொழிற்பாடசாலைகளை அமைத்தமை

இச்சங்கத்தினால் படித்துவிட்டு வேலையற்று இருக்கும் பெண் பிள்ளைகளின் நலன்கருதி 31 தொழிற்பயிற்சி பாடசாலைகள் நிறுவப்பட்டன. அவற்றுள் 15தையல் மற்றும் நெசவுப்பாடசாலைகளும் 16 பன்னவேலைப் பாடசாலைகளும் காணப்பட்டன. இவற்றில் தொழிற்பயிற்சி பெற்றவர்கள் இலகுவில் தொழில் வாய்ப்புக்களைக் பெற்றுக் கொண்டனர்.

## உ.சைவச்சிறுவர் இல்லங்கள் அமைத்தல்

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினால் அநாதரவற்ற சைவசிறுவர்களின் நலன்கருதி 1930 ஆம் ஆண்டு ஆண், பெண் பிள்ளைகளுக்காக தனித்தனி சிறுவர் இல்லங்கள் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டன.2010ஆம் ஆண்டு முதல் உரும்பிராய் கருணை இல்லம் எனப்படும் சைவ பெண் பிள்ளைகளுக்கான அநாதை இல்லமும் சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினால் பொறுப்பேற்று நிர்வகிக்கப் பட்டு வருகின்றது. எனவே தற்போது இதன் பெரும் பாலான பணிகள் இம் மூன்று சைவசிறுவர் இல்லங்களை பராமரிப் பதிலேயே தங்கியுள்ளது.



திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லம்

## ஊ. இணுவில் இராசரத்தினம் தொழில் பயிற்சி மையம்

இச்சங்கத்தின் சைவச்சிறுவர் இல்லங்களில் இருந்து வெளியேறிய பிள்ளைகளுக்கு மின்னினைப்பு,கணினி பயிற்சிகளை வழங்குவதற்காக 2011ஆம் ஆண்டு இணுவிலில் இராசரத்தினம் தொழிற்பயிற்சி மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பலதரப்பட்ட பணிகளைச் செய்த சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் பணிகள் பல இன்று மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அவை தொடர்ந்த வண்ணமுள்ளன.

## பயிற்சிகள்

*01. சைவவித்தியாவிருத்திச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?*
*02. சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் நோக்கங்கள் யாவை?*
*03. சைவப்பாடசாலைகள் சார்பான இதன் பணி யாது?*
*04 சைவாசிரிய கலாசாலை எப்போது?, எங்கே ஆரம்பிக்கப்பட்டது?*
*05. சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் தற்போதைய பணிகளைக் குறிப்பிடுக.*

## செயற்பாடு

★ *உமது பிரதேசத்திலுள்ள அல்லது நீர் அறிந்த சைவசமய நிறுவனம் ஒன்று பற்றி*

1. *தோற்றம்*
2. *நோக்கம்*
3. *பணிகள்*

*என்னும் தலைப்புக்களில் தகவல்களைப் பெற்று வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.*

## பாடச்சுருக்கம்

★ *சைவவித்தியாவிருத்திச் சங்கம் 1923 இல் தோற்றம் பெற்றது.*
★ *இதன் முகாமையாளராக சு.இராசரத்தினம் விளங்கினார்.*
★ *இது 187 பாடசாலைகளையும் ஒரு ஆசிரிய கலாசாலையையும் முகாமைத்துவம் செய்தது.*
★ *சைவச்சிறுவர் இல்லங்களையும் தொழிற்பயிற்சி மையங்களையும் தொடர்ந்து பராமரித்து வருகின்றது.*